**தேதி - 15-09-2022 அசல் வழக்கு எண்.17/2016 வா.சா.1 (சர்தார்பாட்சா)**

**குறுக்குவிசாரணை**

தாவா மூன்று லக்கச் சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா 1 வது லக்கச் சொத்தின் மொத்த சதுரடி எவ்வளவு என்ற விபரம் எனக்குத் தெரியாது. தாவா 2, 3 லக்கச் சொத்துக்களின் மொத்த சதுரடி எவ்வளவு என்று என்னால் குறிப்பிட்டுக் கூற முடியாது. நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை பார்த்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர். இறந்து போன பர்வீன்பானு என்பவர் 1 ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். 1 ம் பிரதிவாதிக்கு என்னுடைய மகளை விசாரித்து தான் திருமணம் செய்து வைத்தேன். திருமணத்தின் போது சீர்வரிசையாக கொடுக்கப்படும் நகைகள் ஜமாத்தில் எழுதுவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் 35 நகை கொடுத்ததாகவோ, மகர் ரூ,50,000/- கொடுத்ததாகவோ அதில் இல்லை. ஆனால் அவ்வாறு கொடுப்பதை வா.சா.ஆ.1 ல் எழுதுவது இல்லை. வா.சா.ஆ.1 ல் ரூ.5,001 கொடுத்ததாக உள்ளது. நான் என்னுடைய மகள் பர்வீன்பானுவை திருமணம் செய்து கொடுக்கும் போது 35 பவுன் நகையும், மகராக தொகை கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் இல்லை. பர்வீன்பானு 1999-2000 ம் வருடம் D.Pharm., படித்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் என்னுடைய மகள் எந்த நிறுவனத்தில்வேலை பார்த்தார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சன் மெடிக்கல்ஸ் என்ற கடையில் வேலை பார்த்தார். சன் மெடிக்கல்ஸ் கடையில் என் மகள் வேலை பார்த்தார் என்பதை காண்பிக்கக் கூடிய ஆவணங்கள் மற்றும் சம்பளப்பட்டியல்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வேலை பார்த்து வந்தார். 1 ம் பிரதிவாதி திருமணத்தின் போது D.B.T.R. மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறையில் ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி மேற்படி பள்ளியில் ஆசிரியராக வேலை பார்தது எவ்வளவு சம்பளம் பெற்று வந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அதன்பிறகு மதுரை செயிண்ட் மேரிஸ் பள்ளியில் பணிமாறுதலாகி பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். 09.03.2007 ல் உசிலம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிஅமர்த்தப்பட்டார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி B.Sc. B.Ed., படித்துள்ளார். 2007 ம் வருடம் உசிலம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்த போது எவ்வளவு சம்பளம்

பெற்று வந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா 1ம் லக்கச் சொத்தை எந்த தேதி, மாதம், வருடத்தில் என்னுடைய மகள் பர்வீன்பானு கிரையம் பெற்றார் என்றால் 2009 ம் வருடம் கிரையம் பெற்றார். தேதி, மாதம் ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 ஆன கிரையஆவணத்தில் கண்டுள்ள 1வது லக்கச் சொத்தை ரூ.4,00,000 க்கு என்னுடைய மகள் கிரையம் பெற்றார். வா.சா.ஆ.2 ஆன கிரையஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன் தற்போது எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.3, 4 ஆன கிரையப்பத்திரங்களில் கண்டுள்ள தாவா 2, 3 லக்கச் சொத்துக்களை பொறுத்து கிரையஆவணத்தை படித்துப் பார்த்தேன். தற்போது எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான கிரையஆவணங்கள் 2009ம் வருடம் என்னுடைய மகளின் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான கிரையப் பத்திரங்களில் நான் கிரையத்தொகை கொடுத்ததாகவோ, அல்லது வேறு தொகை கொடுத்ததாகவோ இல்லை என்றால் சரிதான். தாவா 1ம் லக்கச் சொத்தானது ஓட்டுவீடாக தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா 2ம் லக்கச் சொத்தும் ஓட்டுவீடாகத் தான் வாங்கப்பட்டது. தாவா 3ம் லக்கச் சொத்தும் ஓட்டுவீடாகத் தான் வாங்கப்பட்டது. தாவா 3ம் லக்கச் சொத்தானது 2ம் பிரதிவாதியான ரெப்கோ வங்கியில் ரூ.2,80,000 கடன் வாங்கி கிரையம் பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி தொகை கூடுதலாக கொடுத்து தான் தாவா 3ம் லக்கச் சொத்தை கிரையம் வாங்கினோம். தாவா 3ம் லக்கச் சொத்தை கிரையம் பெற வங்கியில் கடன் வாங்கும் போது என்னுடைய கடன் வாங்கும் போது சென்றார் 1ம் பிரதிவாதி சென்றாரா என்ற விபரம் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதியும், அவரது மனைவியான என்னுடைய மகளும் சேர்ந்து தாவா 3ம் லக்கச் சொத்தினை கிரையம் வாங்கிய விபரம் மட்டும தான் எனக்குத் தெரியும். வேறு விபரம் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ தாவா 3ம் லக்கச் சொத்தினை ரூ.2,80,000 க்கு அதிகமாக தொகை கொடுத்து வாங்கியதாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 1 முதல் 3 லக்கச் சொத்துக்களை என்னுடைய மகள் பெயரில் கிரையம் வாங்கும் போது என்னுடைய மனைவியின் நகைககளை விற்றுத் தான் கிரையம் வாங்கப்பட்டது. என்னுடைய மனைவியுடைய நகை எந்த தேதியில் விற்கப்பட்டது, எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்ற

விபரத்தை என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் மேற்படி சங்கதிகளை சொல்லவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக சொல்லியுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியின் நகைகளை விற்றது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 1 முதல் 3 லக்கச் சொத்துக்களான ஓட்டுவீடுகள் எப்போது இடிக்கப்பட்டு, எப்போது கட்டப்பட்டது என்ற விபரத்தை என்னுடைய பிராதில் கூறியுள்ளேனா என்றால் 2010 ம் வருடம் வங்கியில் கடன் வாங்கும் போது இடிக்கப்பட்டது. மேற்படி விபரத்தை என்னுடைய வழக்குரையில் நான் சொல்லியுள்ளேன். தரைதளத்தை கட்டுவதற்கு நானும், 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து வரைபடஅனுமதி பெற்றோம். வரைபட அனுமதி தற்போது என் கைவசம் இல்லை. வரைபட அனுமதி என்னுடைய மகளான பர்வின்பானு பெயரில் தான் உள்ளது. வரைபடத்தில் 860 சதுரடிக்கு அனுமதி கொடுத்ததாக எனக்கு ஞாபகம். வரைபடம் எந்த தேதி, மாதம், வருடத்தில் கொடுத்தார்கள் என்றால் 2010 ம் வருடம் கொடுத்தார்கள். தரைதளத்தில் இரண்டு வீடுகள் கட்டப்பட்டது.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.